# அறிமுகம்

## 1. "வாய்வழி வெளிப்பாடு" என்றால் என்ன?

எழுத்துவழி வெளிப்பாட்டைத் தவிர ஒரு மொழியின் இரண்டாவது மிகப் பெரிய பயன்பாடு வாய்வழி வெளிப்பாடு. (மனித இனத்தின் வரலாறில் மட்டுமல்லாமல், ஒவ்வொரு தனி மனிதர்களின் வாய்வழி வெளிப்பாடே மொழியின் முதல் தோற்றம். வாய்வழித் தொடர்பாடல் நீண்ட காலம் பழகிய பின்னரே பண்பாட்டு உத்திகளாகிய எழுதுதல், மற்றும் படித்தல் தோன்றின.)

வாய்வழித் தொடர்புக்கு இரண்டு பண்புகள் உள்ளன, கேட்டல், பேசுதல்: உள்வாங்கும் பக்கம் (கேட்டல் / கேட்டு உள்வாங்கல்) மற்றும் உருவாக்கும் பக்கம் (பேசுதல்) அல்லது வாய்வழித் தொடர்பாடல். எனவே, கேட்கும் உணர்திறனை முன்னேற்றுவது, தொடர்பாடல் திறன்களை மேம்படுத்துதலில் இன்றியமையாத வகிபாகத்தைக் கொள்கின்றது என்பதை இது சுட்டுகின்றது.

வாய்வழியான வெளிப்பாட்டை வளர்க்கும் பணி தனக்கே உரிய சில கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும். எனினும் எழுத்துவழித் திறனை வளர்ப்பதற்குரியவற்றிலிருந்து அவை தனியாக இயங்குபவையல்ல. எனவே, இவை இரண்டுமே ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை. அதாவது, வாய்வழித் தொடர்பாடல் பகுதியில் பயிலப்படுபவை பின்னர் எழுத்துத் தகைமைக்கு நன்மை பயக்கும். மேம்படுத்தப்பட்ட எழுத்துத்திறன் வாய்வழியூடான தொடர்பாடல் வேறுபாட்டுக்கு நன்மையான பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

வாய்வழி மொழிப் பயன்பாட்டின் தனிப் பண்புகளுள் கீழே தரப்பட்டுள்ள பின்வரும் குறிப்புகள், இவை பள்ளி வேலைகளுக்கும் இன்றியமையாதவை:

- வாய்வழி உரையாடல் வேளைகளில், பங்குகொள்பவர்கள் வழமையாக ஒரே இடத்தையும், நேரத்தையும் கொண்டிருப்பர். இது வாய்வழியற்ற முகபாவம் மற்றும் சைகை மொழியையும், வேளைக்கேற்ற கையசைவுகளையும் பயன்படுத்துதற்குத் துணைசெய்கின்றது. (எ.கா. அருகிலிருக்கும் ஒருவரை அல்லது முகில் உள்ள வானத்தைச் சுட்டிக்காட்டுதல்.) இத்தகைய வாய்வழியற்ற வழிமுறைகள் உணர்திறனுக்கு உறுதுணையாகவும் வாய்வழித் தொடர்பாடலின் ‘விரைவுநிலைப்’ பின்னணியில் செயற்பாடு உடையனவாகவும் பயனுள்ளனவாகவும் அமைகின்றன. எழுத்துவழித் தொடர்புகளில் இது வேறுபட்டதாக அமையும். எழுத்துவழித் தொடர்பு-களில் "எழுதுதல்" மற்றும் "வாசித்தல்" எனும் இரு திறன்களும் வெவ்வேறு நேரங்களில் இடம்பெறுவ-தால் மீளாக்கம் செய்வதோ மீண்டும் வாசித்தலோ சாத்தியமாகின்றது.(தொலைபேசியூடாக அல்லது மி-ன்னரட்டையூடாக உரையாடுவது, சிறப்பு நிலையுடையன. அவை இவ் விளக்கத்தில் பொருளாகக் கொள்ளப்படவில்லை.)

- மொழியின் அடிப்படையில், வாய்வழி வெளிப்பாடு தனக்கேயுரிய விதிகளையுடையது. அவை எழுத்து மொழியினின்று வேறுபட்டவை. எனவே, முற்றுப்பெறா வாக்கியங்கள், வாக்கியத் துண்டுகள், மீள உரைப்பவை, தேர்ந்தெடுத்த மொழிமாற்றுகள் (எ.கா. : முதல் மொழியிலிருந்து பள்ளிமொழிக்கு அல்லது எழுத்து மொழியிலிருந்து பேச்சுமொழிக்கு மாறுதல்), இலக்கணத் தவறுகள் என்பவை ஒவ்வொரு நாள் உரையாடல்களிலும், விதிவிலக்கானவை எனினும் இயல்பானவையாகக் கொள்ளப்படுகின்றன. இதனால் உரையாடலில் இது எந்த வித இடையூறினையும் ஏற்படுத்துவதில்லை. பள்ளியில் எடுத்துரைப்பு போன்ற வேளைகளில் "தூய" வாய்வழி வெளிப்பாடு எழுத்து வெளிப்பாட்டு முறைகளையே சாரும். எனினும், மாணவர்களை "அச்சடித்த நூலில்" உள்ளது போல் தவறின்றி பேசுவதை எதிர்பார்ப்பது முற்றிலும் தவறானது. எனினும் வேண்டுமென்றே பண்படுத்தப்பட்ட வாய்மொழி நடைப்பயிற்சிகள் மற்றும் உற்சாகப்படுத்தக் கூடிய சூழ்நிலைகள் (காட்சிப்படுத்தல், எடுத்துரைப்புகள் போன்றவை) தவிர்க்கப்படலாகாது.

## 2. வாய்வழி வெளிப்பாட்டை ஊக்குவித்தல் – பா.மொ.க வுக்கு இதன் பயன் என்ன?

வாய்வழி வெளிப்பாடு மொழி கற்பித்தலில் ஓர் இன்றியமையாத வகிபாகத்தினை பெறுகிறது. எனவே இது பாரம்பரிய மொழி கற்பித்தலுக்கும் பொருந்தும். பெரும்பாலான தொடர்பாடல் வாய்வழியூடாக நடைபெறுவதிலிருந்து (குறிப்பாகக் கீழ் வகுப்புகளில்) இவ் வகிபாகத்தின் இன்றியமையாமை வெளிப்படையாகிறது. ஒவ்வொரு நாள் பாடங்களிலும் திறம்படப் பங்கேற்க, மாணவர்கள் பாடத்தை கேட்டு உள்வாங்க வேண்டும். இவ்வாறு கேட்கும்போது வாய்வழி வெளிப்பாட்டில் பல்வேறு உருவாக்கத் திறன்களைப் பெற்றிருப்பர். வாய்மொழியின் தெளிவான இடத்தை மொழித்திறன் பரப்புகள் மற்றும் செயற்பாட்டிடங்கள் ஆகியவற்றின் பின்வரும் கண்ணோட்டத்தில் காட்டப்பட்டுள்ளது:

| | உட்கொள்ளும் திறன் | வெளிப்படுத்தும் திறன் |
|---|---|---|
| வாய்வழி: முதன்மையான, உள்ளார்ந்த திறன்கள் | கேட்டல்<br>கேட்டு - உள்வாங்கல் | பேசுதல் |
| எழுத்துவழி: இரண்டாவதாகப் பெற்ற பண்பாட்டு உத்திகள் | படித்தல்<br>படித்து - உள்வாங்கல் | எழுதுதல் |

எழுத்து மற்றும் வாய்வழி வெளிப்பாட்டுத் தகைமையின் புறநிலை நிறைவுக்கு இலக்கணத்தையும் சொற்களஞ்சியத்தையும் கையகப்படுத்துவதைக் குறிப்பிடவேண்டும். இது இயற்கையாகவும் கட்டுப்பாடு